மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊரிலேயும் புதிதாக பரிந்துரைகளை உரிய நேரத்தில் அனுப்புமாறு 10—1—1992 நாளிட்ட அரசு கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபோல, பல்வேறு இடங்களிலிருந்து கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் நாம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கின்ற நேரத்தில் நிதியாதாரங்களை பொறுத்து நாம் இந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதே நேரத்தில் ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பள்ளிக்கூடங்களுடைய தரத்தை உயர்த்துவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஓராசிரியர் பள்ளிகளை எல்லாம் ஈராசிரியர் பள்ளிகளாகவும், ஈராசிரியர் பள்ளிகளையெல்லாம் 3 ஆசிரியர் பள்ளிகளாகவும் மாற்றுவதற்கான ஒரு முயற்சி ஏற்பட்டு வருகிறது. ஆகவே, இருக்கின்ற பள்ளிக்கூடங்களைச் சரியாக நாம் நடத்த வேண்டும் என்ற ஒரு திட்டத்தையும் சேர்த்து இப்போது அமல் நடத்த வேண்டியிருப்பதால், அந்த அடிப்படையிலே தான் இந்தப் புதிய பள்ளிகளைத் துவக்குகின்ற முயற்சியிலே நாம் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. ச. புரட்சிமணி : பேரவைத் தலைவர் அவர்களே' தற்போது இந்த கிராமத்திலே தனியார் பள்ளி ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. அது சரியாகச் செயல்படாத காரணத்தினாலும் அந்த கிராம மக்கள் நலம் கருதியும், அடுத்த ஆண்டிலாவது அந்த கிராமத்தில் அரசு ஆரம்பப் பள்ளி ஆரம்பிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற ஒரு பள்ளிக்கூடமே சரியாக நடைபெறவில்லை என்றால் அந்த பள்ளிக்கூடத்தை மூடிவிட்டு அங்கே பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளி ஆரம்பிக்கக் கூடிய சாத்தியக்கூறு இருந்தால் அதுகுறித்து ஆராயலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 518'

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

518— .

சீர்காழி அரசு மருத்துவமனையில் விபத்து பிரிவு ஏற்படுத்துதல்.

* 3577—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் விபத்து பிரிவு ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1992 ஏப்ரல் 9]

(ஆ) படுக்கை வசதி கொண்ட புதிய கட்டிடம் அமைக்கப்படுமா ?

(இ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. து. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் சீர்காழி அரசுபொது மருத்துவ மனையில் விபத்து பிரிவு இல்லாததால் அங்கே அவசரத்திற்கு வருகின்ற நோயாளிகளைக் கவனிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அங்கிருந்து பக்கத்திலே மயிலாடுதுறை செல்ல வேண்டுமானால் 25 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். அதே போல இந்த பக்கத்திலே சிதம்பரத்திற்கு 20 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். எனவே அந்த நேரத்திலே அவசரத்திற்கு வருகின்ற நோயாளிகளை கவனிக்க முடியாததால் அவர்கள் இறக்க நேரிடுகிறது. எனவே, அங்கே விபத்துப் பிரிவு ஒன்றை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா மருத்துவ மனைகளில் 32 படுக்கைகள் இருந்தால் போதும் என்ற வகையிலே இப்போது கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கே குறைவாக இருக்கிறதோ அங்கே எல்லாம் அதிகப்படுத்த வேண்டும் என்ற முடிவையும் எடுத்திருக்கிறோம். இங்கே 56 படுக்கைகள் இருக்கின்றன. எனவேதான் விபத்துப் பிரிவு என்று தனியாக வைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த 56 படுக்கைகளை வைத்துக் கொண்டு விபத்தின் காரணமாக வரக்கூடியவர்களுக்கும் அங்கே மருத்துவம் செய்வதற்கான வாய்ப்பும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தையும் மனதிலே வைத்து ஆய்வு செய்து நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி அரசு பொது மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் குறைவாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து வருகின்ற ஆண்டிலாவது அந்த ஏழை எளிய மக்களுடைய வாட்டத்தைப் போக்குகின்ற வகையில் அவர்களுடைய இந்த குறையை நீக்குவதற்கு புதிய கட்டிடம் படுக்கை வசதியோடு ஏற்பாடு செய்வதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் ஏற்கனவே தெரிவித்தேன். மற்ற இடங்களில் எல்லாம் 32 படுக்கைகளும் அதற்கு கீழே தான் இருக்கின்றன. ஆனால் இங்கே 56 படுக்கைகள் இருக்கின்றன. எனவேதான் கூடுதலாக தேவையில்லை என்று கருதினோம். மேலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்துக்கு இணங்க அதை ஆய்வு செய்து நிதிப் பிரச்சினை மற்ற எல்லாப் பிரச்சினைகளையும் மனதில் வைத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 519, திரு. எ. ஏகாம்பர ரெட்டி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

519—

பள்ளிப்பட்டில் வட்டாரத் தலைமை மருத்துவமனை அமைத்தல்.

* 4304—திரு. எ. ஏகாம்பர ரெட்டி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டில் வட்டாரத் தலைமை மருத்துவமனை (Taluk Headquarters Hospital) அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆணை (நிலை) எண். 1550. சுகாதாரம், நாள் 11—12—1991-ல் 15 வட்டங்களில் வட்டார மருத்துவமனைகளை தரம் உயர்த்த அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் பள்ளிப்பட்டும் இணைந்துள்ளது.

VAIMAIYE VELLUM — TRUTH ALONE TRIUMPHS